# பத்திரிக்கைச் செய்தி

## பட்டா மாற்றம் செய்ய லஞ்சம் வாங்கிய கிராம நிர்வாக அலுவலர் கைது

புகார்தாரர் திரு.ராஜகோபால், கவுஞ்சி கிராமம், கொடைக்கானல் தாலுகா, திண்டுக்கல் மாவட்டத்தில் வசித்து வருகிறார், இவர் கவுஞ்சி கிராமத்தில் தன்னுடைய பெயரிலும் தன்னுடைய தாயார் பெயரிலும் சேர்ந்து 2 ஏக்கர் பரப்பளவுள்ள விவசாய நிலத்தை தன்னுடைய பெயருக்கு பட்டா மாறுதல் செய்து தருமாறும், காலஞ்சென்ற தனது தந்தையின் பெயரிலிருந்த 62 செண்ட் நிலத்தில் 31 செண்ட் நிலத்தை தனது பெயருக்கு பட்டா மாறுதல் செய்து தரக்கோரியும் கடந்த 30.09.2022ம் தேதி கொடைக்கானல் கோட்டாட்சியர் அவர்களின் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விண்ணப்பத்திருந்தார். அதன்பின் ஒரு வாரம் கழித்து மன்னவனூர் கிராம தலையாரி அவருடைய தொலைபேசியில் தொடர்பு கொண்டு உங்களை கிராம நிர்வாக அதிகாரி வந்து பார்க்க சொன்னதாக தெரிவித்தார். பின் புகார்தாரர் மன்னவனூர் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று திரு.சுவாமிநாதன், கிராம நிர்வாக அதிகாரியை சந்தித்துள்ளார், அப்போது கிராம நிர்வாக அதிகாரி புகார்தாரரிடம் நீங்கள் ஏன் கோட்டாச்சியரிடம் சென்று விண்ணப்பம் கொடுத்தீர்கள் என்னிடமே வந்து கொடுத்திருக்கலாமே என கேட்டுள்ளார். தங்கள் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து பரிந்துரை செய்ய ரூ.5,000/- கையூட்டாக கேட்டுள்ளார். உடனே புகார்தாரர் நான் பணத்தை ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன் என கூறிவிட்டு அலுவலகத்தை விட்டு வந்துவிட்டார். பின் 03.01.2023ந் தேதி மீண்டும் புகார்தாரர் திரு.சுவாமிநாதன் அவர்களை சந்தித்து தனது விண்ணப்பம் சம்பந்தமாக கேட்டுள்ளார். உடனே திரு.சுவாமிநாதன் அவர்கள் பணம் கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டுள்ளார். புகார்தாரர் தன்னால் அவ்வளவு பணம் புரட்டமுடியவில்லை என கூறியுள்ளார். உடனே திரு.சுவாமிநாதன், கிராம நிர்வாக அதிகாரி பணம் கொடுத்தால் தான் வேலை நடக்கும் இல்லை என்றால் நீங்கள் அலையவேண்டியது தான் என்றும் பணம் கொடுத்தால் தாலுகா அலுவலகத்திலும் அனைத்து வேலைகளையும் முடித்து தருவதாகவும் கூறினார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், திண்டுக்கல் லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 04.01.2023 திரு.சுவாமிநாதன், கிராம நிர்வாக அதிகாரி லஞ்ச பணம் ரூ.5,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

# PRESS NOTE

## VAO TRAPPED & ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE FOR PATTA NAME TRANSFER

The complainant Tr.Rajagopal, is residing at Kounchi Village, Kodaikanal Taluk, Dindigul District. The complainant and his mother owned 2 acre agricultural land and has joint patta and another property is in his father name. The complainant submitted an application for the patta name transfers of the above properties to his name at the grievance day meeting of District Revenue Officer, Dindigul District. Few days later, Village Assistant called him over phone and direct to meet the VAO. when the complainant met Tr.Swaminathan, Village Administrative Officer, Mannavanoor Village, Kodaikanal Taluk, Dindigul District, he asked why he had given the petition to the DRO, instead of approaching him directly and further demanded Rs.5,000/- as bribe for processing his application. On 03.01.2023, the complainant went to the VAO Office and met the suspect officer Tr.Swaminathan, during which he again demanded Rs.5,000/- as bribe to process the application and get it approved at Tahsildar Office and further stated that if the amount was not paid, the application would be kept pending without any action. Not willing to give the bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Dindigul detachment and preferred a complaint. In this connection a case was registered and a trap was organized today 04.01.2023 and during the trap Tr. Swaminathan, Village Administrative Officer, reiterated his demand and received the bribe amount of Rs.5,000/- from the complainant. The accused was caught red handed by the DVAC and remanded to judicial custody.